
# திராவிடத்தால் வாழ்கிறோம்

820

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

107

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பேளுக்குறிச்சி ஜி.பி.சோமசுந்தரம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# கழகத்தின் வேர்: பேளுக்குறிச்சி ஜி.பி.சோமசுந்தரம்

1961-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 22-ஆம் தேதி வேலூரில் தி.மு.கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் பொருளாளர் கலைஞர் குறித்து, ஈ.வெ.கி. சம்பத் பரப்பி வந்த அவதூறுகளுக்கு, அந்தக் கூட்டத்தில் விரிவாக விளக்கம் அளித்தார் பேரறிஞர் அண்ணா. அந்தப் பொதுக்குழு கூட்டத்தில்தான் சம்பத் விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. முக்கியமாக, அதற்கு முதல்நாள்வரையில் கழகத்தின் மாவட்ட வாரியான வரவு செலவு விவரங்களைப் படித்துக் காண்பித்து, வங்கிக் கணக்குப் புத்தகம், செலான் புத்தகம் என அனைத்தையும் கூட்டத்தின் அவைத் தலைவரிடம் ஒப்படைத்தார் கலைஞர்.

அவைத்தலைவர், அவற்றைச் சரிபார்த்து, செயற்குழுவின் சார்பில் ஏற்றுக் கொண்டார். அன்றைய அவைத்தலைவர் கழகத்தின் முன்னோடி ஜி.பி.சோமசுந்தரம். தந்தை பெரியாரின் பெருந்தொண்டர். பேரறிஞர் அண்ணாவின் ஆத்மநண்பர். கலைஞரை நேசித்த உடன்பிறப்பு. கொங்கு மண்டலத்தில் 'சேலத்து பெரியார்' என்பது அவர் கொண்டிருந்த பெரும் அடையாளம்.

தொடக்கத்தில், ராணுவத்தில் வேலைபார்த்து வந்த சோமசுந்தரம் சமுதாயப் பணிகளில் ஆர்வம்கொண்டு, சுயமரியாதை இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம், இன்றைய நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பேளுக் குறிச்சிதான் சொந்த ஊர். சுயமரியாதைச் சுடராக திராவிடர் கழகத்தில் இருந்து தொண்டாற்றியவர். எப்போதும் கருஞ் சட்டைதான் அணிவார். அதன் காரணமாகவும் கருஞ்சட்டை படைத் தலைவராக இருந்த அண்ணா, சோமசுந்தரம் அவர்களுடன் அவ்வளவு நெருக்கம் கொண்டிருந்தார்.

1948-ஆம் ஆண்டு, சென்னையில் பெரியார் தலைமையில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெற்றுக்கொண்டு இருந்தபோது, இந்தி எதிர்ப்புக்கான ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள் என முன்னெச்சரிக்கையாக அனைவரும் கைது செய்யப்பட்டனர். அப்போது பெரியாருடன் கைது செய்யப்பட்டவர்களில் சோமசுந்தரமும் ஒருவர்.

## முதல் செயற்குழு உறுப்பினர்

கழகத்தின் தொடக்க கால உறுப்பினர். திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து அண்ணாவுடன் வந்த பெருவாரியான பெரியார் தொண்டர்களில் ஜி.பி.சோமசுந்தரம் குறிப்பிடத்தக்கவர். கழகம் தொடங்கியபோது அண்ணாவைச் சுற்றி அனைவரும் தம்பிகள்தான். அண்ணாவை விடவும் வயதில் மூத்தவர்களாக இருந்தவர்கள் ஒருசிலர்தான். அவர்களில் ஒருவர் சோமசுந்தரம். தனக்கு இளையவராக இருந்தாலும், திராவிடக் கொள்கைக்கு அடுத்த தலைமுறை திசைகாட்டி அண்ணாதான் என உறுதியாக நின்றார். அதனால்தான், கழகத்தின் முதல் 16 செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக சோமசுந்தரம் இருந்தார்.

1952-ஆம் ஆண்டு தஞ்சையில் கூட்டப்பட்ட பொதுக்குழு, கழகத்தின் தலைமைக்கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தது. 1955-ஆம் ஆண்டு ஏப்ரல் வரை அவர்கள்தான் பொறுப்புகளில் இருந்தனர். அதற்குப் பின்னர் மாவட்டக் கழகங்களில் தேர்தல்கள் மூலம் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்படியாக, கழகத்தின் தொடக்க கால வேர்களில் ஒருவர் சோமசுந்தரம்.


## எழுச்சி உரை நாயகர்

1954-இல் கழகத்தின் சேலம் மாவட்ட மாநாட்டில், வரவேற்புக் குழு தலைவராக, அவர் ஆற்றிய எழுச்சி உரை இளைஞர்களைச் சுண்டி இழுக்கக்கூடியது. "ஆணையிடுங்கள் செய்து முடிக்கிறோம்; அறப்போரா ? தயங்க வில்லை. அறுநூறு தோழர்களை அனுப்பி வைத்தோம். அடக்குமுறைகளா? கவலையில்லை. கழகத்தைக் கோட்டையாக்கும் காரியங் களையாற்றத் தயங்காதவர்கள் நாங்கள்!" என அவர் ஆற்றிய தொடக்க உரை மிகச் சிறப்பானது.

1955-ஆம் ஆண்டு சேலம், ஏப்ரல் 21-ஆம் தேதி 'திராவிட நாட்டுப் போர் அணியின் தளபதிகள்' என செய்தி வெளியிட்டது தி.மு.கவின் ஏடான 'நம் நாடு'. சேலம் மாவட்டக் கழகச் செயற்குழுத் தேர்தல், பொறுப்பாளர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளராக தேர்வானவர் ஜி.பி.சோமசுந்தரம். சேலம் கழகத்தினர் அவர்மேல் கொண்டிருந்த, அந்த நம்பிக்கை அவரின் இறுதிக்காலம் வரை தொடர்ந்தது.

1956-ஆம் ஆண்டு டிசம்பர் கடைசியில் சேலத்தில் நடைபெற்ற செயற்குழு - பொதுக் குழு கூட்டம். அதில் கலந்து கொள்வதற்காக தலைவர்களும், நிர்வாகிகளும் சேலத்தில் திரண்டவர். ரயில் நிலையம், பேருந்து நிலையம் தொடங்கி, கூட்டம் நடைபெற்ற அன்னதானப்பட்டி 'பிட்டா ரைஸ் மில்' வரை கழகக் கொடிகள் தோரணங்கள், வரவேற்பு வளைவுகள் என அமர்க்களப்படுத்தி யிருந்தார் மாவட்டச் செயலாளர் சோமசுந்தரம். அந்தக் கூட்டத்தில்தான் கழகம் தேர்தலைச் சந்திப்பது குறித்து தீவிரமான ஆலோசனைகள் செய்யப்பட்டன. தேர்தல் நிதி குறித்து கருத்துகள் கேட்கப்பட்டன. அதேநேரத்தில் கூட்டத்தின் ஏற்பாடுகள் குறித்து, பெருமையாக பல நாட்களுக்குப் பேசப்பட்டன. அதை சிறப்பாக செய்து முடித்தவர் சோமசுந்தரம்.

கழகத்தின் கட்சிக் கட்டமைப்புப் பணிகளில் மட்டுமல்ல, நெசவாளர் துயர் துடைக்கும் அறப்போராட்டம், கல்லக்குடி ரயில் மறியல், கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம், இந்தி எதிர்ப்புப் போர் என கழகம் முன்னெடுத்த வீச்சான போராட்டக் களங்களில் எல்லாம் சேலம் மாவட்டக் கழகத்தை வழிநடத்தியவர் சோமசுந்தரம்.




## சிறுவர்கள் கட்சியா?

நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பேரறிஞர் அண்ணாவுடன் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பு பெற்றவர்களில் சோமசுந்தரமும் ஒருவர். அண்ணா நாடாளுமன்றத்துச் சென்ற காலத்தில், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த இடதுசாரி உறுப்பினர் பூபேஷ் குப்தா, உத்தரப் பிரதேசத்தை சேர்ந்த வலதுசாரி உறுப்பினர் வாஜ்பாய் ஆகியோர் அண்ணாவின் அறிவார்ந்த உரைகளில் மதிப்பு கொண்டு அண்ணாவை அடிக்கடி சந்திப்பர். அவைக்கு வெளியே அப்படியான சந்திப்புகளில், வாஜ்பாய் ஒருமுறை அண்ணாவிடம், ''நீங்கள் சிறியவர்களை வைத்தே கட்சியை நடத்துகிறீர்கள்" என வேடிக்கையாகக் கூறி இருக்கிறார். பின்னாட்களில் சோமசுந்தரம் அவர்கள் எம்.பி.யாக நாடாளுமன்றம் சென்றபோது, வாஜ்பாய் சந்திக்கையில், சோமசுந்தரம் அவர்களை அறிமுகம் செய்து, 'இவரும் தி.மு.க.தான் வயது 70-க்கும் மேல்' எனக் குறிப்பிட்டுள்ளார் அண்ணா. இப்படி, அண்ணாவுக்கும் சோம சுந்தரத்துக்குமான உணர்வுபூர்வமான குறிப்புகள் ஏராளம்.

1961-ஆம் ஆண்டு கழகத்தில் சிறு பிரிவு வந்தபோது அண்ணாவுடன் உறுதியாக நின்ற சோமசுந்தரம் அவர்கள், அண்ணா மறைவுக்குப் பின், கழகம் உறுதியாக நீடிக்க வேண்டும் என கலைஞருடன் நின்றார்.

கழகத்தின் மூத்த முன்னோடியாகத் திகழ்ந்த சோமசுந்தரம் அவர்கள், 1971-ஆம் ஆண்டு ஜூன் 25-ஆம் தேதி இயற்கை எய்தினார். கலைஞரும் கழகத்தினரும் முன்னோடிகளை மறப்பதில்லை என்பதற்கு அடையாளமாக 1972-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17, 18 தேதிகளில் தர்மபுரியில் நடைபெற்ற தர்மபுரி மாவட்டக் கழக மாநாட்டுப் பந்தலுக்கு ஜி.பி.சோமசுந்தரம் பெயர் சூட்டப்பட்டது.

1991-ஆம் ஆண்டில் நாமக்கல் நகரில் அன்றைய பேரூராட்சித் தலைவர் பழனிவேலன், நகராட்சி வணிக வளாகம் அமைத்து, ஜி.பி.சோமசுந்தரம் பெயரைச் சூட்டினார். 1995-ஆம் ஆண்டில் சேலத்தில் சிலை அமைத்து, திறப்பு விழாவுக்கு கலைஞரை அழைத்து வந்தார் வீரபாண்டி ஆறுமுகம். காலம் கடந்தாலும், அவரை மறக்காமல் ஒவ்வொரு ஆண்டும் வீரவணக்கம் செலுத்து கின்றனர், சேலம் மாவட்டக் கழகத்தினர். கழகத்திலும் கருப்புச் சட்டையை விடாமலிருந்த பெரியவர், இந்த சேலத்துப் பெரியார் பேளுக்குறிச்சி ஜி.பி.சோமசுந்தரம். இளைஞர்கள் அறிய வேண்டிய வரலாற்று நாயகர்!.

> **"கழகத்திலும் கருப்புச் சட்டையை விடாமலிருந்த பெரியவர், இந்த சேலத்துப் பெரியார் பேளுக்குறிச்சி ஜி.பி.சோமசுந்தரம்."**

...துடிக்கும்

## மனிதம் எங்கே?

ஜம்மு காஷ்மீரில் சட்டப்பிரிவு-370ஐ நீக்கிய பிறகு அமைதிப் பூங்காவாகிவிட்டது என ஒன்றிய அரசு கூறி வந்தது. ஆனால், பஹல்காமில் நடைபெற்ற கொடூரமான தீவிரவாதத் தாக்குதல் உள்துறையின் செயலற்ற தன்மையை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. "ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு யார் கையில் உள்ளது? உள்துறை அமைச்சகம் பொறுப்பு இல்லையா?"எனக் கேள்வி கேட்ட பத்திரிகையாளர், பா.ஜ.க.வினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில், 'மோடியிடம் சொல்லுங்கள்' என தீவிரவாதிகள் சொன்னதாக பொய்யைப் பரப்பினார்கள். இந்துக்கள்மீது குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக பரப்பினார்கள்.


ஆனால், பா.ஜ.க.வாலும், இந்துத்துவ சக்திகளாலும் இப்படிப் பரப்பப்பட்ட பொய்கள் அனைத்தும் இம்முறை உடனுக்குடன் அம்பலமாகிவிட்டன. இறந்தவர்களில் ஒருவர் இஸ்லாமியர். சுற்றுலாப் பயணிகளாகத் தமிழ்நாட்டில் இருந்து சென்றவர்கள், உள்ளூர் மக்கள் தங்களுக்கு நீட்டிய ஆதரவுக்கரம் குறித்து நெகிழ்ச்சியோடு ஊடகங்களுக்குப் பேட்டி அளித்துள்ளனர். காஷ்மீர் மக்கள் அனைவருமே தீவிரவாதிகள் போல சித்திரிக்கப் படுவது, சகித்துக்கொள்ள இயலாத ஒன்று என்று காட்டமாகவே கூறியிருக்கின்றனர். காஷ்மீர் உள்ளூர்வாசி ஒருவர் தாக்குதலில் காயம்பட்டவரை தோளில் தூக்கிச் செல்லும் படங்களும் வெளியாகின.

ஒட்டுமொத்த காஷ்மீரி மக்களும் பாதிக்கப்பட்ட மக்களுடன் நிற்கிறோம் என்பதைக் களத்திலும், எண்ணத்திலும் வெளிப்படுத்தி விட்டனர். ஆனால், வெளிமாநிலங்களில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிற காஷ்மீர் மாணவர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. இதுவே மனிதத் தன்மையற்ற செயல் என்றால், வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பிரதமர் மோடி, காஷ்மீருக்குச் செல்லாமல் விரைவில் சட்டமன்றத் தேர்தல் நடக்கவுள்ள பீகாருக்குச் செல்கிறார். தமிழ் நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு அதேநாளில் விருந்து வைத்தார். மனிதம் எங்கே?

## ஃப்ளாஷ்பேக்



### பேராசிரியருக்கு சிறப்பு செய்தேன்!



இரா.சுந்தரமூர்த்தி

1989-ஆம் ஆண்டு காரைக்குடி ஐந்து விளக்கு அருகிலுள்ள, காய்கறிச் சந்தைத் திறப்பு விழா, அன்றைய கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காரைக்குடித் தொகுதியின் அன்றைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் சித.சிதம்பரம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்குச் சால்வை அணிவித்து, சிறப்பு செய்தேன், அப்போது அவருடன் எடுக்கப்பட்ட புகைப்படம்..

**– இரா.சுந்தரமூர்த்தி,**
**தொ.மு.ச. முன்னாள் தலைவர்,**
**ராம்கோ, சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தேர்தல் வெற்றி தோல்வி ஆய்வு!

1957-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் தேதி, குளித்தலை, கடம்பர்கோயிலில், கழகத்தின் பொதுக்குழு கூடியது. அப்போது கழகத்தின் பொதுச் செயலாளராக நாவலர் பொறுப்பு வகித்தார். அப்போது நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தலில் ஏற்பட்ட வெற்றி தோல்விகள் குறித்து விளக்கம் அளிக்கும் விதமான கருத்தறியும் கூட்டமாக அந்தப் பொதுக்குழு இருந்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.